

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2026) தகைசால் தமிழர், விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, சென்னை, தியாகராயர் நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம்கவி, ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் உள்ளனர்.

### தகைசால் தமிழர் – விடுதலைப் போராட்ட வீரர் – மறைந்த

# தோழர் நல்லகண்ணுவின் உடலுக்கு முழு அரசு மரியாதை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப்.26–**

**மறைந்த தகைசால் தமிழர் விடுதலைப் போராட்ட வீரர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் திருவுடலுக்கு முழு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் மறைவுற்ற செய்தியை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வேதனையும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளததோடு, மறைந்த தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்க தோழர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் இந்திய சுதந்திர போராட்டம், விவசாயிகள் போராட்டம், தீண்டாமைக்கு எதிரான போராட்டம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக என தனது வாழ்நாளில் பெரும்பகுதியை போராட்டம், சிறை வாழ்க்கை என அர்ப்பணித்துக் கொண்டவர். பொதுவுடமை கருத்தியலும், திராவிட கருத்தியலும் கொண்டு, தொழிலாளர் நலன் மற்றும் எளிய வாழ்வின் சான்றாக திகழ்ந்த அந்த மாமனிதருக்கு 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசானது தகைசால் விருதை வழங்கி பெருமைப்படுத்தியது.


தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்களுக்கு 2007 ஆம் ஆண்டு அப்போதைய தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் சகாயோகி விருதினையும், அதே ஆண்டு தமிழ்நாடு அரசு அம்பேத்கர் விருதினையும் வழங்கி அன்னாரை பெருமைப்படுத்தியது.

விடுதலைப்போராட்ட வீரராக மாபெரும் சமூக செயற்பாட்டாளராக மற்றும் அரசியல் கட்சித் தலைவராக அவர் இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் ஆற்றிய தொண்டினை போற்றும் விதமாக அவரது திருவுடலுக்கு முழு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க முகத்திலே புன்னகையுடன்

# அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை!

## தோழர் நல்லகண்ணு மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!



**சென்னை, பிப்.26 -**

**“கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை தோழர் நல்லகண்ணு” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள உருக்கமிகு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

“எனக்கு ஒரு கண்ணில் சரிவரப் பார்வை இல்லை என்றாலும், அகத்தில் மற்றொரு கண் இருக்கிறது. அதுதான் நல்லகண்ணு” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கண்ணாகப் போற்றப்பட்ட முதுபெரும் தலைவர் - தோழர் நல்லகண்ணு அய்யா அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி நம்மையெல்லாம் கடும் துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

நம் சமகாலத்தில் வாழ்ந்த சமரசமற்ற போராளி; நாட்டின் விடுதலைக்காக, பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்காக தம் இனிய வாழ்வின் பெரும் பகுதியை ஈகம் செய்த தியாகப் பெருஞ்சீலர்!

சிறை, சித்திரவதை, வலிகள் நிறைந்த வாழ்க்கை என்று எத்தனை இடர்கள் வந்தாலும்

**“சுட்டுப் பொசுக்கினாலும் - தோழர்களைத்**
**தூக்கினில் ஏற்றினாலும்**
**விட்டுப்பிரியாது - செங்கொடி**
**வீரம் குறையாது”**

என்று தோழர் ஜீவா முழங்கியதைப் போல கொள்கை உறுதி குலையாமல் குன்றமென நிமிர்ந்து நின்ற பண்புக்குரியவர் தீரமிகு தோழர் நல்லகண்ணு.

**போராட்டக்களங்களில்**
**தலைவர் கலைஞரோடு தோளோடு தோள் நின்றவர்!**

கொள்கைக் கனல் அகத்துளே தீயாய் மூண்டு தகிக்க, முகத்திலே புன்னகையுடன் அமைதியாக வலம் வந்த அரசியல் எரிமலை அவர்!

## அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

முத்தமிழறிஞர் கலைஞருடன் என்றென்றும் இனிய நட்பைப் பூண்டிருந்தவர். பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டக் களங்களில், தலைவர் கலைஞருடன் தோளோடு தோள் நின்று களமாடியவர்.

பொதுவுடைமைக் கருத்தியலும், திராவிட இயக்கக் கருத்தியலும் சமூக மாற்றத்துக்கான இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட வேண்டிய கோட்பாட்டுத் தோழமைகள் என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். நமது ‘திராவிட மாடல்’ அரசின் சார்பில் தோழர் அவர்களுக்குத் ‘தகைசால் தமிழர்’ விருதை வழங்கும் வாய்ப்பைப் பெற்றது எனது பெரும் பேறு!

எப்போதும் என்மேல் அன்பும் பாசமும் கொண்டவராக இருந்தார். திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு உருவாக்கிய திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்றார். அய்யாவை அவரது ஒவ்வொரு பிறந்தநாளிலும் சந்தித்து வாழ்த்து பெறுவதை நான் வழக்கமாக வைத்திருந்தேன்.

**அப்பழுக்கற்ற தலைவர்!**

தோழர் நல்லகண்ணு அய்யா அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. அவர் பெற்ற விருதுகள், பரிசுகள் எவையானாலும், அவற்றோடு தொகை அனைத்தையும் கட்சிக்காகவும், மக்கள் நலனுக்காக அரசிடம் ஒப்படைத்த அப்பழுக்கற்ற தலைவர் அவர்!

“தான் வேறு, இயக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்காமல், இயக்கத்திற்காக இயக்கமாகவே வாழ்ந்தவர்” என்று அவரது நூற்றாண்டு விழாவில் நான் குறிப்பிட்டது இன்றும் நினை வலைகளாக வந்து என் நெஞ்சில் மோதுகிறது.

தோழரின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும்!

மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும்! பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லாத் தோழர் நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்! தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் ‘தகைசால் தமிழரை’ இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் – சுதந்திரப் போராட்ட வீரர்

# ‘தகைசால் தமிழர்’ தோழர் நல்லகண்ணு மறைந்தார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – அனைத்துக் கட்சியினர் அஞ்சலி!

**சென்னை, பிப். 26-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திர போராட்ட வீரருமான தோழர் இரா.நல்லகண்ணு (வயது 101) அவர்கள் நேற்று பிற்பகல் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பைப் பெற்றவர், அதே போன்று அவர்களின் மீதும் மிகுந்த அன்பும் பற்றும் கொண்டவர் தோழர் நல்லகண்ணு அவர்கள் ஆவார்! அவரது மறைவு தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு அரசியலுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் பெரும் இழப்பாகும்.**

தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டத்தில் 1925, டிசம்பர் 26-இல் இராமசாமி - கருப்பாயி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே கம்யூனிஸ்ட் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு மக்கள் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார். கட்சிப் பணிகளுக்காகத் தனது படிப்பைப் பாதியிலேயே கைவிட்ட தோழர் நல்லகண்ணு அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டபோது போராட்டக் களத்தில் நின்று இரண்டு ஆண்டுகள் தலைமறைவு வாழ்வும், 6 ஆண்டுகள் சிறைக் கொடுமையையும் அனுபவித்தவர்.

சிறையிலிருந்து திரும்பிய பின், 1958ல் ரஞ்சிதம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். ரஞ்சிதம் அம்மையார் ஆசிரியையாகப் பணிபுரிந்து நல்லகண்ணு அவர்களின் பொதுவாழ்க்கைக்குப் பெரும் துணையாகத் திகழ்ந்தார். இவர்களுக்கு காசிபாரதி, ஆண்டாள் என இரு மகள்கள் உள்ளனர்.


கம்யூனிஸ்ட் கட்சிப் பணிகள், விவசாய இயக்கப் பணிகள், மக்கள் பணி எனப் பதினெட்டு வயதில் தொடங்கிய பணிகளை சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தார். தமிழ்நாடு முழுக்க இவரது கால் படாத இடமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு பொதுவாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டவர். கட்சிப் பணிகளுக்காக வீட்டிலிருந்து கிளம்பிப் போனால் வீடு திரும்ப குறைந்தது இரண்டு வாரங்கள் ஆகுமென நேர்காணல் ஒன்றில் தோழர் இரா.நல்லகண்ணு அவர்கள் கூறியிருக்கிறார் என்பதை இங்கே நினைவு கூரலாம். அந்த அளவிற்கு மக்கள் பணி மீது மிகுந்த ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

**நான்கு முறை மாநிலச் செயலாளர் பொறுப்பு!**

தோழர் நல்லகண்ணு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராக நான்கு முறை தேர்வு செய்யப்பட்டு பதவி வகித்துள்ளார். கட்சியின் விதியின்படி ஒருவர் இரண்டு முறை மட்டுமே செயலாளர் பொறுப்பு வகிக்க முடியும் என இருந்தபோதிலும், அவரது கட்சி அர்ப்பணிப்பு காரணமாக அனைத்திந்திய தலைமை விதியைத் தளர்த்தி நான்கு முறை பதவி வகிக்க அனுமதித்தது.

**தன்னலமின்றி உழைத்தவர்!**

சாதி, மத, வர்க்க பேதங்களுக்கு எதிராகப் போராடும் குணம் கொண்ட இவர், தன்னலம் என்பது துளியும் இன்றி பொது நலனே தனது மூச்சாகக் கொண்டு செயல்பட்டவர் ஆவார். சான்றாக, கட்சி அவரது பிறந்தநாளில் வழங்கிய ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகையை மீண்டும் கட்சிக்கே வழங்கினார். அதேபோல் தமிழக அரசு வழங்கிய அம்பேத்கர் விருது மற்றும் ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையையும் விவசாயச் சங்கத்திற்கும் கட்சிக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார்.



**‘தகைசால் தமிழர்’ விருது பெற்றவர்!**

திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு அரசின் உயரிய விருதாக கருதப்படும் தகைசால் தமிழர் விருது 2022 ஆம் ஆண்டு தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டதுடன் அவர் தகைசால் தமிழர் விருது - ரூபாய் 10 இலட்சம் காசோலையினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு வழங்கினார். ஆனால் விருதுத் தொகையான ரூபாய் 10 லட்சத்தினை அப்பொழுதே முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார் தோழர் நல்லகண்ணு அவர்கள்!

2016ல் தனது துணைவியார் ரஞ்சிதத்தை இழந்த நல்லகண்ணு அவர்கள் வயது முதிர்வு காரணமாக இல்லத்தில் ஓய்வில் இருந்தார். இருந்தாலும் பொது மேடைகளில் அவ்வப்போது கலந்துகொண்டு சிறப்பித்தவர் ஆவார்.

இந்த நிலையில், 22.08.2025 அன்று நல்லகண்ணு அவர்கள் வீட்டில் தவறி விழுந்த காரணத்தினால் தலையிலும், கைவிரலிலும் சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட்டன. உடனடியாக அவரது குடும்பத்தினர் அவரை தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உடல்நலம் தேறினார்.

**உடல்நலக்குறைவு!**

இருந்தாலும் 24.08.2025 அன்று மாலை மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போதே அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து சுமார் ஒன்றரை மாத சிகிச்சைக்கு பின் தோழர் நல்லகண்ணு அவர்கள் உடல் நலம் தேறி, மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீடு திரும்பினார்.

ஆனால், கடந்த சில மாதங்களாக அடிக்கடி மூச்சுத் திணறல் ஏற்படுவதும், மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்புவதுமாக இருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மீண்டும் உடல்நலம் குன்றி சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு செயற்கைச் சுவாசம் பொருத்தப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

**மருத்துவமனைக்கு விரைந்த முதல்வர்!**

இச்செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவமனைக்கு நேரில் சென்று சிகிச்சை குறித்தும், உடல் நலன் குறித்தும் குடும்பத்தாரிடம் விசாரித்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி தோழர் நல்லகண்ணு அவர்கள் நேற்று (25.2.2026) மதியம் 1.55 மணியளவில் இயற்கையெய்தினார். தோழர் நல்லகண்ணு மறைவுக்கு முதல்வர், பல்வேறு தலைவர்கள், திரையுலக பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பேராசிரியர்கள், முனைவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அவரது உடல் தியாகராயர் நகர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் வியாழன் மதியம் வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது.

அதன்பின் அவரது உடல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவரது விருப்பப்படி தானமாக வழங்கப்படுகிறது.